

# வாரந்தோறும் ஒரு தீபம்!

உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபம்!
(சங்கீதம் 119:105)

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

வியாழன்தோறும்

| 26.06.2025 | 26. 'சத்தியத்தின்படி வாழாதவர்களை' தேவன் மாத்திரமே பிரித்தெடுக்க முடியும்! |
|---|---|



**வெ**ற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை என்றும்! ஆவிக்குரிய ஆழ்ந்த சத்தியங்கள் என்றும்! திரண்டு வந்த ஜனத்திரளில் பெரும்பாலோர் "ஏதோ அபூர்வமான ஒன்றில் ஆர்வம் கொண்டார்கள்" அவ்வளவு தான். இவ்வாறு அபூர்வங்களைக் கண்ட பரவச மக்களுக்கென்றே, 'ஆழ்ந்த சத்தியங்கள்' எனக் கூறும் புத்தகங்கள், புத்தக சாலையில் நிரம்பி வழிகின்றன.

இந்த வெறும் ஆர்வத்தோடு சத்தியங்களைக் கேட்ட திரளானோர், அதன்படி வாழ்வதற்கு ஒரு அடிகூட எடுத்து வைக்கவில்லை! வெற்று ஆர்வத்தைக் காட்டினார்கள், கைக்கொள்ளும்படியான தீராத வாஞ்சையோ அவர்களுக்கு இல்லை!

'இவர்களையெல்லாம் சபையில் பிரித்து எடுக்கும்' அந்த கடினமான செயலை தேவனிடமே விட்டுவிட வேண்டும். ஆவிக்குரிய சோதனைகளை, தேவனுடைய ஆவியானவர் மாத்திரமே வைத்திட முடியும். வேத வாக்கியங்களில் திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் 'அவர்களே அறியாமல்' பரிசுத்த ஆவியினால் சோதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகிலும், பரிசுத்த ஆவியானவரோ ஒரு நபரிடம் கூட "நீங்கள் சோதிக்கப்பட போகிறீர்கள்" என முன் கூட்டியே கூறியதில்லை! ஆகவேதான், நாம் அனைவருமே 'விழிப்புள்ள ஜீவியம் செய்திட' கவனம் கொண்டிருப்போமாக!

– ரத்னம்